**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.**

**அசல் வழக்கு எண். 67/2018**

நாள் 10.01.2023

பெயர் இளமாறன் த/பெ. யேசுதாஸ்

பி.வா.சா.1 சத்திரபிரமானம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

1. நான் இவ்வழக்கில் 7ம் பிரதிவாதி என்றால் சரிதான். 6ம் பிரதிவாதி வழக்கு சொத்தை எனக்கு விற்றவர் ஆவார். 6ம் பிரதிவாதி எனக்கு எந்தவித உறவும் இல்லை என்றால் சரிதான். நான் ஒசூரில் யாஷ் சீட்டிங் ( வாகனத்தின் இருக்கை தயாரிக்கும் கம்பெனி) சொலிசன் என்ற தனியார் கம்பெனியில் பணியாற்றி வருகிறேன். எனக்கு சொந்த ஊர் புலவன்பாடி கிராமம் ஆகும்.

2. மேற்படி தனியார் நிறுவனத்தில் நானும் ஒரு பங்குதாரர் என்றால் சரிதான். நானும் என் மனைவியும் மேற்படி நிறுவனத்தின் பங்குதாரர் ஆவர். நான் ஒசூரில் தான் குடியிருந்து வருகிறேன் என்றாலும் நான் புலவன்பாடியில் குடியிருப்பதாக குறிப்பிட்டு இருக்கும் விலாசம் தவறானது என்றால் சரியல்ல. நான் விவசாய வேலை செய்வதாக குறிப்பிட்டிருப்பதும் சரியல்ல. நானும் சரவணனும் ஒரே வழக்கறிஞரை வைத்து இவ்வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் நான் மட்டும் தான் வழக்கறிஞர் வைத்திருக்கிறேன். சரவணனை பற்றி எனக்கு தெரியாது.

3. என் வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ள வக்காலத்தில் 2ஆவதாக உள்ள கையொப்பம் என்னுடையது ஆகும். எனது வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ள வக்காலத்தில் உள்ள முதலாவதாக உள்ள கையொப்பம் சரவணன் கையொப்பம் ஆகும். நான் கையொப்பம் செய்யும்போது சரவணன் என்னுடன் கையொப்பம் செய்யவில்லை. நான் எனது வழக்கறிஞரிடம் கூறி எதிருரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த எதிருரையில் நான் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் கையொப்பம் செய்துள்ளேன்.

4. நான் எதிருரையை தனியாக தான் போட்டேன், சரவணனுடன் சேர்ந்து எதிருரையை தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்த பதிலுரையில் உள்ள கையொப்பம் என்னுடையது ஆகும். சரவணன் பதிலுரை தாக்கல் செய்தாரா இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செயத பதிலுரையில் உள்ள விவரங்களை நான் தான் வழக்கறிஞருக்கு தெரிவித்தேனா என்றால் ஆமாம். மேற்படி எதிருரையில் நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் மற்றும் அதிலுள்ள விவரங்கள் சரியானதா என்றால் சரியானது.

5. நான் வாங்கிய வழக்கு சொத்து எனக்கு முன்பாக சரவணனுக்கு உரிமையானது, சரவணனுக்கு முன்பாக நடேசன் வாரிசுகளுக்கு உரிமையானது, நடேசனுக்கு முன்பாக யாருக்கு உரிமையானது என்று எனக்கு தெரியாது. நடேசனுக்கு எவ்வாறு வழக்கு சொத்து உரிமையானது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் எனது எதிருரையில் வழக்கு சொத்து நடேசனுக்கு எவ்வாறு உரிமையானது என்றும் ஆதியில் வழக்கு சொத்து யாருக்கு உரிமையானது என்றும் குறிப்பிட்டு சொல்லி உள்ளேன்.

6. நான் எனது எதிரரையில் 7ம் பத்தியில் வாதி நடேசன் மற்றும் அவரது மனாக சூசைராஜ் என்பவரிடம் இருந்து சர்வே எண்.367/1 விஸ்தீரணம் 32 சென்ட்டை ஜக்பந்தியின் படி வாங்கியிருப்பதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். வாதி கிரயம் வாங்கிய சொத்தின் ஜக்பந்தியையும் எனது எதிருரையில் 7ம் பத்தியில் குறிபபிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

7. வாதி நடேசன் மற்றும் சூசைராஜ்யிடம் இருந்து 17.3.1992ம் ஆண்டு சர்வே எண் 367/1ல் விஸ்தீரணம் 22 சென்ட்டை ஜக்பந்தியுடன் வாங்கியிருப்பதாக எனது எதிருரையில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். வாதி மேற்படி கிரய முன்னிலைக்கு ஜக்பந்தியுடன் அனுபவித்து வருகிறோர் என்றால் சர்வே எண். 367/1ல் வாதி அனுபவித்து வருகிறார்.

8. நான் 6ம் பிரதிவாதியிடம் இருந்து அவருக்கு உரிமை மற்றும் அனுபவம் இல்லாத வழக்கு சொத்தை நான் கிரயம் வாங்கி உள்ளேன் என்றால் சரியல்ல.

9. வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல
என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால்
திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால்
சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால்
சாட்சியின் கையெழுத்து.கைரேகை பெறப்பட்டது.

(ஒம்) பொ.தி. சதீஷ்குமார்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஆரணி.